**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI**
**Deposition of Witnesses for P.W.1 in MCOP.No. 117/2021**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திருமிகு.ஐயப்பன் | தந்தை / கணவர் பெயர் | : திருமிகு.சக்திவேல் |
| கிராமம் | : நெப்புகை | வட்டம் | : கந்தர்வக்கோட்டை |
| வயது | : 21 | மாவட்டம் | : புதுக்கோட்டை |

Solemnly affirmed accordance with the provisions of the Act of 1973 of the day of 25.10.2024.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. விபத்து நடக்கும்பொழுது நான் 12ம் வகுப்பு படித்து வந்தேன் என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக போலீசில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. போலீசில் நான் புகார் கொடுத்ததாக இருந்தால் அது தவறுதானே என்றால் ஆமாம். இந்த விபத்து சம்மந்தமாக நான் வேறு எந்த வழக்கிலாவது நான் சாட்சி சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. இந்த விபத்தில் என்னை தவிர வேறு யாருக்கும் காயம் இல்லை என்றால் சரிதான். விபத்து சம்மந்தமான எவ்வித குற்ற வழக்கிற்குரிய ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பயணம் செய்த பேருந்தில் அன்றைய தினம் கூட்டம் அதிகமாக இருந்தது என்றால் சரிதான்.

2. நான் மாணவர் என்ற முறையில் இலவச பயண அட்டையின் படி நான் பயணம் செய்தேன் என்றால் சரிதான். நான் படியில் நின்று கொண்டு பயணம் செய்தேன் என்றால் சரிதான். பேருந்தின் படியில் நான் நின்று வந்த போது பேருந்து சாலையில் உள்ள பள்ளமான இடத்தில் இறங்கி போன போதபேருந்தின் கடைசி படியானது தரையில் மோதியபோது எனது வலது காலின் 3 விரல்கள் பேருந்தின் படிக்கும் தரைக்கும் இடையில் சிக்கி துண்டாகிவிட்டது என்றால் சரிதான். பேருந்து நடத்துனர் என்னை நிறுத்தி கும்பலாக இருந்த பேருந்தில் ஏற்றிக்கொண்டதாகவும், கூட்டம் அதிகமாக இருந்ததால், பேருந்தில் அமர முடியாமலும், பேருந்தின் நடுப்பகுதிக்கு செல்ல முடியாமலும் படியில் நிற்க வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளானதாகவும், அடுத்த நிறுத்தத்தில் பயணிகள் இறங்கி பேருந்து காலியாகிவிடும் என்று நடத்துனர் சொன்னதாகவும் நான் போலிசீல் கூறவில்லை என்றால் என்னை விசாரித்தவர்களிடன் சொன்னே.

3. இந்த விபத்து எனது கவனக்குறைவால்தான் நடந்தது என்றும், பேருந்தின் ஓட்டுநர் அல்லது நடத்துனரின் கவனக்குறைவால் இந்த விபத்து நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு சாதாரண காயம்தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு நிரந்தர ஊனமோ, வருமான இழப்போ, வேலை இழப்போ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. மருத்துவசெலவு ரசீதுகளை வழக்கிற்காக போலியாக தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேட்டிருக்கும் இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. மனுதள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/– ஐயப்பன்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– பெ.க.சிவக்குமார்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.